DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No. 9/2022**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.லெனின் **Pw 4** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of November 2024.

**முதல் விசாரணை**

நான் ஆலங்குளம் கனரா வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்க்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆலங்குளத்தை சேர்ந்த மோசஸ் என்பவரது மகன் யோவான் என்பவர் எங்கள் வங்கியில் வரவு செலவு கணக்கு வைத்திருந்தார். வாகன விபத்தில் மேற்படி யோவான் இறந்துவிட்டதால் அவரது கணக்கு சம்பந்தப்பட்ட அறிக்கையை நான் நீதிமன்றத்தில் இன்று தாக்கல் செய்கிறேன். விபத்தில் இறந்துபோன யோவான் மாருதி கார் நிறுவனம் மற்றும் ஜெகோவா என்ற ஸ்பேர் பார்ட்ஸ் நிறுவனத்திலும் பணிபுரிந்து வந்து இரண்டு நிறுவனங்களிலிருந்தும் சம்பளம் பெற்றுவந்தார். அதில் ஒரு சில வரவு செலவுகள் எங்கள் வங்கி மூலமாக நடந்தது. அவரது **சேமிப்பு கணக்கு அறிக்கை வா.சா.ஆ.13** ஆகும். (எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள யோவான் என்ற நபர் எப்படி, எங்கு இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நபர் என்ன வேலை செய்து வந்தார், எவ்வளவு சம்பளம் பெற்றார் என்ற விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் மது அருந்தும் பழக்கம் உள்ளவரா என்று எனக்கு தெரியாது. வருடத்திற்கு எவ்வளவு சம்பளம் பெற்றார் என்ற விவரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, ஏனென்றால் ஒவ்வொரு மாதமும் சம்பள பணத்தை எங்கள் வங்கி மூலமாக செலுத்தப்படவில்லை.

என்ன வகையில் யோவானுக்கு மாருதி மற்றும் ஜெகோவா நிறுவனங்களிலிருந்து அவ்வப்போது பணம் செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யோவானுக்கு எந்தெந்த தேதிகளில் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை மேற்படி நிறுவனங்களின் அதிகாரிகள் மட்டுமே சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

**(Cross adopted by R6 and R7)**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi